நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை (9-ஆம் தேதி) காலை தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கை துவக்கி வைக்க வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



காஞ்சிபுரம், ஜன.8-

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை 9ஆம் தேதி காலை நடைபெறும் யூஇமேஜின் தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கை துவக்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திண்டு வந்து, கண்டோன் மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகில் நாளை காலை 8.30 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் யூஇமேஜின், தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கம் துவக்க விழா, நாளை 9ஆம் தேதி காலை 9.00 மணி அளவில் நடைபெறவுள்ளது.

இந்த துவக்க விழாவில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கத்தை துவக்கி வைக்கிறார்.

இவ்விழாவிற்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் நாளை காலை 8.30 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இக்கருத்தரங்கினை துவக்கி வைக்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன் மெண்ட் பட்ரோடு, அண்ணா சிலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரமாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக - நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில்

# சமத்துவப் பொங்கல் விழா துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!



காஞ்சிபுரம், ஜன.8-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுர்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் தை முதல் நாள் தமிழ் புத்தாண்டு தமிழர் திருநாள் சமத்துவ பொங்கல்விழா (12.01.2024ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை காலை 11.00 மணி கலைஞர் திடல், இடைக்கழிநாடு பகுதியில் நடைபெறுகின்றது.

விழாவிற்கு நான் (க.சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமை வகிக்கிறேன்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

ச.இனியரசு டி.வீ.கோகுலகண்ணன், மலர்விழிகுமார் சன் பிராண்ட் கே.ஆறுமுகம் பெ.மணி, சு. பால்ராஜ், டி.சஞ்சய்காந்தி, எஸ்.அருள் முருகன், அ. ஆண்டோசிபில்ராஜ், ஆர். எஸ்.யுவராஜ் .ப.சுகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சமத்துவ பொங்கல் வைத்து பரிசுகள் வழங்கி இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் க.செல்வம் எம்.பி., சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் எம்.மகாலட்சுமியுவராஜ், செம்பருத்திதுர்கேஷ், இரா.நாகன், டி.ஆர்.நாராயணன், ஆர்.டி.அரசு, எம். எஸ்.சுகுமார், சி.கே.வி. தமிழ்செல்வன், கு.குமார், கே.கண்ணன், வி.தம்பு, பி.எச்.சத்தியசாய், கே.எஸ். ராமச்சந்திரன், வி.ஏழுமலை, இ.சரவணன், ஏ.சிற்றரசு, எம்.எஸ்.பாபு, பி.எம்.குமார், கெ.ஞானசேகரன், டி.குமார், க.குமணன், பி.எம்.பாபு, பி.சேகர், எஸ். சந்துரு, கே.திலகர், அ.தசரதன், க.வெங்கடேசன், டி.மோகன்தாஸ் வி.டி.ஆர். வி.எழிலரசன், ஏ.சுந்தரமூர்த்தி, என்.எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், வி. சுகுமாறன், தி.அன்பழகன், ப.சுந்தரவரதன், வி.எஸ். ராமகிருஷ்ணன், வே.ஏழுமலை, எஸ்.டி.பிரேம்சந்த் எஸ்.உசேன், எஸ்.கே. ராஜேந்திரன், எஸ்.கே.பி.. சீனிவாசன், எஸ்.சிகாமணி, பி.சசிகுமார், எழிலரசி சுந்தரமூர்த்தி, எஸ்.சிகாமணி, பி.சசிகுமார், எழிலரசி சுந்தர மூர்த்தி, சம்யுக்தாஅய்யனார், நித்யா சுகுமார், ஆர். கே.தேவேந்திரன், மலர்கொடிகுமார், ஹேமலதா ஞானசேகரன், சாந்தி இராமச்சந்திரன், இல்லாமல்லி, நந்தினிகரிகாலன் , கோ.தசரதன், எஸ்.மோகன், சாந்தி சீனிவாசன், சசிகலா ஆறுமுகம், எஸ்.குணசேகரன், எஸ்.எம்.ஜியாவுதின், திவாகர், ஓ.எஸ்.தினகரன், பி. கார்த்திகேயன், ஏ. நூருல்அமீன், ஆர்.இரங்கநாதன், வி.புருஷோத்தமன், கே. நாகராஜ், ஏ.என்.பாரத், நாகராஜன், எஸ்.கண்ணதாசன், செல்வி, எஸ்மாலதி, ஆ. சசிகுமார், டி. எஸ். ரமேஷ், சி.பி.ராதாகிருஷ்ணன், வி.மலர்மண்ணன், இ.அசோகன், டி.வெங்கட்ராமன், டி.ஜெய் கணேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ் நன்றி கூறுகிறார்.

**துணை முதல்வர் நல உதவிகள் வழங்குகிறார்!**

இவ்விழாவில் 5000 குடும்பங்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் 48 கழக தோழர்களுக்கு கலைஞர் நூற்றாண்டு நாணயம் வழங்குதல் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்குதல் 200 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல் 2024 நடாளுமன்றத் தேர்தலில் உழைத்த (மா) நகர, ஒன்றிய, பேருர் செயலாளர்களை கௌரவித்தல், 6,500 முரசொலி ஓராண்டு சந்தா வழங்குதல், 200 விளையாட்டு குழுக்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் 13 தொண்டர் அணியினருக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல் என்று வழங்கி சிறப்பிக்கிறார். எனவே இவ் விழாவில் கழக முன்னணி யினர், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ.அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் முதற்கட்டமாக

# 59 வாகனங்கள் - இயந்திரங்களைக் கொண்டு கட்டடக் கழிவுகள் அகற்றும் பணி!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.08-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கட்டடக் கழிவுகளை அகற்றும் வகையில், முதற்கட்டமாக தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க. நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்களில் 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு தீவிரமாக கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (07.01.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள், பூங்காக்கள், மயானபூமிகள் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குப்பைகள் மற்றும் கட்டடக் கழிவுகள் அகற்றப்பட்டு, தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கட்டடக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்க்கும் வகையில், 15 மண்டலங்களிலும் இடம் நிர்ணயம் செய்யப்பட்டு, அவ்விடங்களில் மட்டுமே கட்டடக் கழிவுகளை கொட்டிட பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேயர் பிரியாராஜன் தலைமை! 6வது நாளாக சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட –

# வில்லிவாக்கம் - துறைமுகம் தொகுதிகளில் பாகவாரியாக மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம் !

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு – மக்கள் தேவைகளைக் கேட்டறிந்தார்!







சென்னை,ஜன.8-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர், வில்லிவாக்கம், திரு.வி.க. நகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று ஆறாவது நாளாக தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நேற்று (07.01.2025) காலை 7.30 மணியளவில் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி, 8 வது மண்டலம், வட்டம்97 வது வட்டம் பாகம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி 60 அ வட்டம் பாகம் 114 .ஆகிய பாகங்களில் மேயர் திருமதி. பிரியா ராஜன் தலைமையில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், மண்டல குழு தலைவர் கூ.பீ. ஜெயின்,பி. ஸ்ரீ ராமுலு, பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு,எஸ்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை யில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அயனாவரம், நியூ ஆவடி சாலை, வெள்ளாளர் தெருவில் வசிக்கும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அப்பகுதியிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடல் மற்றும் பூங்காவை நேரில் சென்று பார்வையிட்டு, அப்பூங்காவை மேம்படுத்தி தருமாறும், மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் காலை உணவு தயாரிக்கும் சமையல் கூடத்தையும் ஆய்வு செயதும், அப்பகுதியிலுள்ள மக்களிடம் அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து சென்னை தீவுத்திடலில் 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2025ல் இடம் பெற்றுள்ள சி.எம்.டி.ஏ. கண்காட்சி அரங்கினை பார்வையிட்டதோடு, 60 வது வார்டு, ராஜாஜி சாலையில் உள்ள அன்னை சத்யா நகர் பொதுமக்களை சந்தித்து அப்பகுதியிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடல் மற்றும் பூங்காவை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பூங்காவை மேம்படுத்தி, மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் படிப்பதற்குண்டான வசதியை ஏற்படுத்தி தருமாறும் மாநகராட்சி அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மேலும் திருவிக நகர் வடக்கு பகுதியில் மக்கள் தேவைகளை தீர்க்கும் பயணமாக 74வது வட்டத்தில் ஆய்வு செய்தபோது ஏகாங்கிபுரம் இரண்டாவது தெருவை சார்ந்த எம்.மதுசூதனன் என்பவர் அமைச்சரிடம் இஸ்திரி பெட்டி கேட்டு வைத்த கோரிக்கையை ஏற்று அதனை நிறைவேற்றும் விதமாக நேற்று அவரை அழைத்து இஸ்திரி பெட்டி வழங்கி மகிழ்ந்தார்.

இந்த ஆய்வுகளின்போது மாமன்ற உறுப்பினர்கள் இசட்.ஆசாத், லதா வாசு, வட்ட செயலாளர்கள் விக்னேஷ் சீனிவாசன், ஆ.நா.பார்த்திபன், எஸ். புஷ்பராஜ், எம்.சுரேஷ், அறிவுடைநம்பி மற்றும் சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மா னக் கழக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

